




# NCDC’s bid to energize consumer co-ops; TN Minister chips in

Raju banks on NCDC for igniting consumer movement in TN

by **Rohit Gupta** — December 22, 2019 in **NCDC** 0



Cooperative lender of India- National Cooperative Development Corporation (NCDC) recently organized a National Workshop on Consumer Cooperatives and Value Chains at its headquarters, which was attended by Chairmen, MDs, Secretaries and CEOs of consumer coops spread across the country.

Tamil Nadu Cooperative Minister Sellur K. Raju inaugurated the workshop and was the Chief Guest for the occasion. His presence, among other things ensured wide media coverage of the event in South Indian publications. Besides the Minister, NCDC MD Sundeep Nayak, senior officials of NCDC and other dignitaries were also present on the occasion.

Addressing the participants, Raju said, "Govt. of Tamil Nadu is providing financial assistance for consumer cooperatives like constructing new buildings, modernizing their units and many other things. Co-op stores in Tamil Nadu are functioning well amidst tough competition from the private sector", he underlined.

On this occasion, he urged NCDC to provide Rs 115 crore to 23 cooperative wholesale stores and Rs 64 crore to 128 primary cooperative stores as share capital assistance with a lock in period of five years and repayable in 10 years.

The minister further added that, "NCDC should constitute expert committee to identify the areas where in value chain for agriculture produce can be established in co-ops in Tamil Nadu. NCDC may finance these projects. Co-ops in Tamil Nadu are willing to tie up with NCDC in these aspects", he asserted.

Underscoring the importance of computerization of co-ops, the minister informed that all the district cooperative wholesale stores have been computerized at the initiative of Tamil Nadu govt. For this, NCDC may provide Rs 50 crore as financial assistance for the computerization of 370 primary co-op stores in Tamil Nadu, he stated.



In his welcome speech NCDC MD Sundeep Nayak said, "Consumers co-ops may play a vital role in

increasing the income of farmers. NCDC has invested more than Rs 325 crore in consumer co-ops and would increase the investments many- fold in future", asserted Nayak who has begun many firsts including global co-op fair, at NCDC after he took over as its MD.

Talking candidly, the MD said "Though the appeal of consumer co-ops among masses is a mixed one, we have to go to strategy to make it more attractive for people." Nayak listed challenges before consumer co-ops and ways to tackle them. Due to electronic market this sector is facing a problem because consumer co-ops are not technologically advanced. Lack of professionalism is consumer co-op is also hampering their development, he said.

Stressing that consumer co-ops play an important role in controlling the prices of commodities by discouraging hoarding and black-marketing Nayak felt that cooperatives can play crucial role in its new avatar of FPOs.

Several participants also spoke on the occasion. One of the participants, Narendra Upadhaya, Chairman, Kendriya Thok Upbhokta Sahakari Bhandar, Etah said, "Government departments are not contributing their bit to develop consumer co-ops. We are planning to set up mini malls in the premises of one of ours store and thus seek fund from NCDC.

Another participant from Confed Rajasthan informed about the working of his federation and said, "We are having the masala unit and selling products under the brand name of Uphar. The federation is operating 405 medical stores.

D. Amaladas, MD, TN State Consumer Cooperative Federation said, "Technology in consumer coops is lagging which is to be strengthened", he said.

NCDC PR Head, R Vanitha proposed a vote of thanks.



**Tags:** bank Breaking consumer cooperative cooperative MoU NCDC Sellur K Raju Sundeep Nayak tamil nadu

Share 284 Tweet 177 Send Share 71

Previous Post

**Malaysia to host Global Youth Forum Co-op Entrepreneurship**

Next Post

**Direction on Kerala Mercantile Co-op Bank to continue**

## Co-op Queries



Ask your cooperative-related questions to **Mr I C Naik**
info@indiancooperative.com

**Note: Must mention your State and the Society Registration Number**

- Query from Narendra Kumar

# தமிழகக் கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்த ரூ.229 கோடியை வழங்க மத்திய அரசு தயார்

## அமைச்சர் செல்லூர் ராஜு தகவல்

நமது நிருபர்

**புது தில்லி, டிச. 20:** தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளின் உள் கட்டமைப்பை மேம்படுத்தத் தேவையான ரூ.229 கோடி நிதியை வழங்க தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தயாராக இருப்பதாக தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜு தெரிவித்தார்.

தில்லியில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் சார்பில் வெள்ளிக்கிழமை நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகளும் அதன் தொடர் மதிப்பீடுகளும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கை செல்லூர் கே. ராஜு தொடங்கிவைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தமிழகத்தில் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் உள்கட்டமைப்பு வசதியை மேலும் மேம்படுத்தவும், கணினிப் பணிகளை மேற்கொள்ளவும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (என்சிடிசி) ரூ.229 கோடி நிதியுதவி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதற்கு ஆவன செய்வதாக அதன் மேலாண் இயக்குநர் சந்தீப்குமார் நாயக் தெரிவித்தார்.

இந்த கருத்தரங்க நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கு நவீனத் தொழில் நுட்பப் பயிற்சி அளிப்பது, நிதியுதவி - முதலீடுகள் வழங்குவது, உபரி விளை பொருள்கள் பரிமாற்றம் ஆகியவை தொடர்பாக தமிழகக் கூட்டுறவுத் துறை மற்றும் என்சிடிசி இடையே மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இதற்கான ஒப்பந்தத்தில் நானும் (அமைச்சர் செல்லூர் கே. ராஜு), என்சிடிசி மேலாண்மை இயக்குநர் சந்திப்குமார் நாயக்கும் கையெழுத்திட்டோம். இந்த ஒப்பந்தம் தமிழக விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகும்.




தில்லியில் வெள்ளிக்கிழமை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் கருத்தரங்கில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரிமாறிக் கொள்ளும் தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜு மற்றும் என்சிடிசி மேலாண்மை இயக்குநர் சந்தீப் குமார் நாயக். உடன் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பின் மேலாண்மை இயக்குநர் டி. அமலதாஸ், என்சிடிசி தலைமை இயக்குநர் ஆர்.வனிதா.

நாட்டில் வெங்காயத் தட்டுப்பாட்டை போக்க மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இன்னும் இரண்டு வாரங்களில் அவை இறக்குமதியாகும் எனத் தெரிகிறது. ஆனால், அதற்கு முன்னதாகவே தமிழக அரசு பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், ரேஷன் கடைகள் மூலம் கிலோ ரூ.40-க்கு வெங்காயம் விற்பனை செய்து வருகிறது.

மேலும் எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் கிலோ ரூ.80 முதல் ரூ.100 வரை விலை வைத்து விற்கப்படுகிறது.

தமிழகத்தில் கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக மேலாண் இயக்குநர் சந்தீப் குமார் நாயக் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்றார்.

**புதிய மாவட்டங்களில் கூட்டுறவு வளர்ச்சித் திட்ட பணிகள்:** முன்னதாக கருத்தரங்குக்குத் தலைமை வகித்து அமைச்சர் செல்லூர் கே.ராஜு பேசியதாவது: நுகர்வோர் கூட்டுறவுகளும், அதன் தொடர் மதிப்பீடுகளும் என்ற இந்தக் கருத்தரங்கம் தற்போதைய சூழலில் மிகவும் அவசியம். தொடர் மதிப்பீடுகளால் வேளாண் விளைபொருள்களின் சந்தை விலை அதிகரிக்கும். மேலும், வேளாண் விளைபொருள்களின் தரத்தை நிலைப்படுத்தவும், விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கச் செய்யவும், வேலை வாய்ப்பை உருவாக்கிதரக் கூடியதாகவும் உள்ளது.

இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் 2019 முதல் 2020 அக்டோபர் வரை ரூ.892 கோடி மதிப்புள்ள கட்டுப்பாடற்ற பொருள்களும், ரூ.1,368 கோடி மதிப்புள்ள கட்டுப்பாடுள்ள பொருள்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் நிதி நிலைமையை மேம்படுத்த 23 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு ரூ.115 கோடி நிதியை, ஐந்து ஆண்டுகள் கழித்து 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் வழங்க தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐந்து மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர்.